**நில அளவைச் சபை - 2014**

நில அளவைச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவைச் சபை அதிகாரச்சட்டத்தின் 57(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின்

காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நில அளவைச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 45 பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சகல பொருண்மையான சமமான உருப்படிகள் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தொழிற்துறை பாடநெறிக் கட்டண வருமானம் ரூபா 1,289,000 தொகையும் அதற்குரிய செலவினம் ரூபா 1,038,648 தொகையும் ஏனைய வருமானம் மற்றும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஒருவரால் தண்டப்பணமாக மீளாய்வாண்டின் போது கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 10,000 தொகை ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் வருமானம் ரூபா 10,000 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஒருவரால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 10,000 தண்டப்பணத் தொகை பெற வேண்டிய தண்டப்பண வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

தொழிற்துறை அபிவிருத்தி பாடநெறிகளை நடாத்துதல் தொடர்பான கோவைகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பாடநெறிக் கட்டணம் ரூபா 1,282,000 தொகையாக இருந்ததுடன், அது ரூபா 1,289,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 7,000 தொகையான வேறுபாட்டிற்கு காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 தொங்கல் கணக்குகள்

திருத்திய நிதிக்கூற்றுக்கள் சமப்படாத காரணத்தால் ரூபா 8,819 தொகை தொங்கல் கணக்கொன்றில் பதிவு செய்யப்பட்டு கணக்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய கணக்குகள்

சேவையிலிருந்து விலகிய உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 26,325 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.3.2 ஆம் பந்தியின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கையொன்றுக்காக ஆகக் குறைந்தது 03 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட வேண்டிய போதிலும், தொழிற்துறை பாடநெறிகளை நடாத்துவதற்காக நிறுவனமொன்று தெரிவுசெய்யப்பட்டு அதற்கான பாடநெறிக் கட்டணமாக ரூபா 336,156 தொகையும் உணவு பானங்களுக்காக ரூபா 612,932 தொகையும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக சபையின் நிதி விளைவுகள் ரூபா 467,510 தொகையான மிகையொன்று காணப்பட்டதுடன் இதனோடு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,051,313 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 583,803 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் தாபன மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 916,198 ஆல் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

நில அளவைகள் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றுவதன் செயல்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 37(அ) பிரிவின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் நில அளவைச் சபைக்கு கிடைக்கப்பெற்றருந்த மீளாய்வாண்டில் தீர்க்கப்பட இருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 106 ஆக இருந்த போதும்

ஆண்டின் போது தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 81 ஆக இருந்தது. அதில் 34 அதாவது 42 சதவீதம் நீதிமன்றத்தில் வழக்கென்று காணப்படுகின்ற முறைப்பாடுகள், நில அளவைச் சபைக்குரித்தல்லாத மற்றும் ஆவணங்கள் பூரணமற்ற முறைப்பாடுகளாக இருந்ததால் நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவை தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளாக அறிக்கையிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், நீதிமன்றத்தில் வழக்கென்று காணப்படுகின்ற முறைப்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கோ அல்லது நிராகரிப்பது தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட முறைமையொன்றினை நில அளவைச் சபை பின்பற்றியிருக்கவில்லை.

(ஆ) அளவைகள் அதிகாரச்சட்டத்தின் (ஈ) மற்றும் (ஊ) பிரிவுகளின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 6 தொழில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(இ) அதிகாரச்சட்டத்தின் 43(1) மற்றும் (2) பிரிவுகளின் பிரகாரம் சபையினால் சகல பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தையுடைய நிலஅளவையாளர்களின் பெயர்ப் பட்டியலொன்று வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டில் 1,070 பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ள நிலஅளவையாளர்கள் இருந்த போதிலும், 2014 மார்ச் 28 ஆம் திகதிய 1856 ஆம் இலக்க வர்த்தமானியில் 1,012 பதிவுசெய்யப்பட்ட அங்கீகாரம் பெற்றுள்ள நிலஅளவையாளர்களின் பெயர்கள் மாத்திரமே வெளியிடப்பட்டிருந்தன.

(ஈ) அதிகாரச்சட்டத்தின் 37(ஊ) மற்றும் (எ) பிரிவுகளின் பிரகாரம் நிலஅளவையாளர்கள் தொழில்துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய தகைமைகளைப் பெறும் பரீட்சைகளை நடாத்துதல், கல்வி, பயிற்சி மற்றும் ஏற்றுக்கொள்ளல் போன்ற விடயங்களின் போது யாதேனுமொரு நிலைமையொன்றை உருவாக்குவதற்காக வெளிநாட்டு அதிகாரிகளுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களைக் நோக்கமாக கொண்டிருந்த போதிலும், அவற்றை நிறைவேற்றுவதற்காக எந்தவொரு வேலைத்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) காணி அளவைகள் அதிகாரச்சட்டத்தின் 12(1) பிரிவின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட அதிகாரம் பெற்றுள்ள நிலஅளவையாள ரொருவரால் தயாரிக்கப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட குறிப்பான வகைகளுக்குரிய திட்ட

வரைபடங்களின் மூலப் பிரதிகளில் அல்லது வரைபடங்களின் பிரதிகள் அந்த திட்டவரைபடம் அல்லது வரைபடங்களை உறுதிப்படுத்தியதன் பின்னர் முப்பது (30) நாட்களுக்குள் நில அளவையாளர் நாயகத்திற்கோ அல்லது அச்செயற்பாட்டிற்காக அவரால் முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கோ தரவுத்தளமொன்றை தாபிப்பதற்காக வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், அது தொடர்பாக 2005 நவம்பர் 23 ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கட்டளை வெளியிடப்பட்டிருந்ததுடன், நில அளவைச் சபையால் 2006 ஏப்ரல் 20 ஆம் திகதிய LSC/Cir/02/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையும் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 மே 15 ஆம் திகதி வரையிலும் அது தொடர்பாக போதியளவு நடவடிக்கையொன்று எடுக்கப்படாமல் இருந்ததுடன், கணக்காய்வு அறிக்கைகளிலும் இது தொடர்பில் தொடர்ச்சியாக அறிக்கையிப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

அளவை சபை மூலம் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்த 03 தொழில் திறன் அபிவிருத்தி பாடநெறிகளின் முதலாவது செயலமர்விற்காக 119 பேர் சமூகமளித்திருந்ததுடன் அதற்காக ரூபா 97,141 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் இரண்டாம் மற்றும் மூன்றாம் செயலமர்வுகளுக்காக முறையே 352 பேர் மற்றும் 365 பேர் சமூகமளித்திருந்ததுடன், அதற்காக செலவினம் முறையே ரூபா 423,459 தொகையும் ரூபா 519,547 தொகையுமாக இருந்தன. அதன் பிரகாரம் ஒருவருக்காக செலவிடப்பட்டிருந்த கிரயம் இரண்டாவது செயலமர்வின் போது 47 சதவீதத்தாலும் மூன்றாவது செயலமர்வின் போது 74 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

தொழிற்துறை அபிவிருத்தி பாடநெறிகள் நடாத்தலின் உள்ளபடியான வருமானம் ரூபா 1,289,000 ஆகவும் உள்ளபடியான செலவினம் ரூபா 1,038,648 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் வருமானம் ரூபா 375,000 ஆகவும் செலவினம் ரூபா 140,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமையால் வருமானம் 244 சதவீதம் மற்றும் செலவினம் 642 சதவீத முரண்களையும் காட்டியது.

## 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்தி தொடர்பான அவதானிப்புகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு மற்றும் 2009 சனவரி 06 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ/35/4/391 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி, 2009 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் சபையின் செயலாளர் பதவி வெற்றிடமாக நிலவுவதுடன் இதற்காக நிரந்தர அடிப்படையில் ஓர் உத்தியோகத்தர் சேர்க்கப்படும் வரை உரிய பதவிக்காக தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தரொருவர் பதில் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன் படி, சபைச் செயலாளர் பதவிக்காக நில அளவைத் திணைக்களத்தின் ஓர் உத்தியோகத்தர் பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் நிரந்தர செயலாளர் ஒருவரை நியமிக்குமாறு 2012 யூலை 05 ஆம் திகதி பொது முயற்சிகள் குழுவால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அப் பதவியை நிரப்புவதற்கு 2014 மே 30 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 5.3 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பை நிறைவேற்றல்

அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களால் அளவிட்டு தயாரிக்கப்பட்ட திட்ட வரைபடம் அவர்களின் பொறுப்பிலேயே காணப்படுவதுடன், குறித்த அதிகாரம் பெற்ற நில அளவையாளர் மரணித்தல், வெளிநாடு செல்லல் மற்றும் சேவையில் ஈடுபடாத சந்தர்ப்பத்தில் திட்ட வரைபடத்தின் பிரதிகளை பொது மக்களுக்கு பெற்றுக்கொள்வதில் கஸ்டமாக இருந்த போதிலும், அவர்களால் தயாரிக்கப்பட்ட திட்ட வரைபடங்களின் பிரதிகளை திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்கான முறைமையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு